பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 01 2026** **12 40**
வியாழக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜனநாயக நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை, புனே உள்ளிட்ட 29 மாநகராட்சிகளில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

4. ஈரான் வான்பரப்பில் விமானங்கள் பறக்க இன்று காலை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5. ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இன்று மும்பை அணி - உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<>>>>

ஜனநாயக நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற காமன்வெல்த் அவைத்தலைவர்களின் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் ஜனநாயக மாண்புகள் உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக கூறினார்.

நமது நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமைக் கொள்கை, ஜனநாயகத்தை வலிமையாக மாற்றிவிட்டதாக அவர் கூறினார்.

ஜனநாயக அரசு மூலம் கடைகோடி மக்களுக்கும் அரசுத் திட்டங்களின் பலன்கள் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசின் திட்டங்கள் மூலம் 25 கோடி மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் தனித்துவமான பணப்பரிவர்த்தனை முறையான UPI உலகிலேயே மிகப்பெரிய டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை முறை என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா செயற்கை நுண்ணறிவு மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஜனநாயகம் வலிமை அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் நாடாளுமன்றம் ஜனநாயகத்தை வலுப்படுத்தி மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கி வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் நாளை நடைபெற உள்ள ஸ்டார்ட்அப் இந்தியா மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் இளம் தொழில்முனைவோருடன் கலந்துரையாடுகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தை கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி தொடங்கி வைத்ததைக் குறிக்கும் வகையில் இந்த விழா நாளை நடைபெறுகிறது.

<<<<>>>>

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மக்கள் அதிகாலையில் எழுந்து சூரியனை வணங்கி புதுப்பானையில் பொங்கலிட்டு உறவினர்களுடன் உற்சாகமாக பொங்கல் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அறுவடை திருநாளான பொங்கல் பண்டிகை இயற்கைக்கும், விவசாயிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக கொண்டாடப்படுவதாக கூறினார்.

அனைவரின் இல்லங்களிலும் நலமும், வளமும் பெருகட்டும் என்று அவர் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், சமூக நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதாகத் தெரிவித்தார்.

வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொங்கல் பண்டிகை தொழிலாளர்களின் மாண்பிற்கு பெருமை சேர்க்கும் வகையில் உள்ளதாக கூறினார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், புதிய சிந்தனைகளும், புதிய தொடக்கங்களும் சேர்ந்து வாழ்வில் இன்பங்களைத் தரவல்ல தைத்திருநாளாம் இன்று உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக கூறினார்.

உலகம் உயிர்வாழ பயிர்செய்த விவசாயப் பெருமக்களின் உழவுத்தொழிலை வணங்கும் விதமாகவும், சூரியபகவானை வணங்கும் விதமாகவும் பொங்கல் பண்டிகையை கொண்டாடி வருவதாக அவர் தெரிவித்தார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாக்கியத்திற்கு ஏற்ப அனைத்து மக்களின் வாழ்விலும் மகிழ்வும், செல்வமும் பெருகிட வாழ்துவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை, புனே உள்ளிட்ட **29** மாநகராட்சிகளில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

காலை மணி **7.30**க்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை மணி **5.30** வரை நடைபெறும்.

இந்த மாநகராட்சிகளில் உள்ள **893** வார்டுகளைச் சேர்ந்த **2** ஆயிரத்து **869** கவுன்சிலர் பதவிகளுக்கு இந்த தேர்தல் நடைபெறுகிறது.

இந்த மாநகராட்சிகளில் **3** கோடியே **48** லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தலையொட்டி இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படும்.

<<<<>>>>

ராணுவ தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ராணுவ வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், இந்திய ராணுவம் நாட்டின்

ஒருமைப்பாட்டையையும், இறையாண்மையும் பாதுகாக்க தொடர்ந்து பணியாற்றி வருவதாக கூறியுள்ளார்.

நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் ராணுவ வீரர்கள், பேரிடர் காலங்களில் உதவிபுரிவதில் முன்னிலை வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

ராணுவ வீரர்களின் “நாடு முதன்மை” என்ற கொள்கை ஒவ்வொரு இந்தியரையும் ஊக்கமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், ராணுவ வீரர்களின் தைரியமும், தியாகமும் நாட்டைப் பாதுகாக்க குடிமக்களை ஊக்குவிப்பதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், ராணுவ வீரர்களின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்புக்கு நாடு தலைவணங்குவதாக தெரிவித்தார்.

நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான தருணங்களில் நாட்டைப் பாதுகாக்க தன்னலமற்ற சேவையை இந்திய ராணுவம் வழங்கி வருவதாக பிரதமர் புகழாரம் சூட்டினார்.

நாட்டுக்காக இன்னுயிர் ஈந்த ராணுவ வீரர்களை இந்நாளில் நினைவுகூறுவதாக பிரதமர் தெரிவித்தார்.

1949ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியாக கரியப்பா பதவியேற்ற இந்நாள் ஒவ்வொரு ஆண்டும் ராணுவ தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

<<<<>>>>

அமெரிக்கா உடனான பிரச்சினை தொடரும் நிலையில், ஈரான் வான்பரப்பில் விமானங்கள் பறக்க இன்று காலை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிராக போராடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதையடுத்து இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் தலையிட்டால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசு நடத்திய தாக்குதலில் இதுவரை 2 ஆயிரத்து 615 பேர் உயிரிழந்ததாக மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

இதனிடையே ஏர்-இந்தியா விமான நிறுவனம் விடுத்துள்ள செய்தியில் ஈரான் வான் எல்லையை தவிர்த்து விமானங்கள் செல்வதால் பயணத்தில் தாமதம் ஏற்படும் என்று கூறியுள்ளது.

மேலும் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சில விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காசி தமிழ்ச்சங்கமம் நாட்டின் ஒற்றுமையையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பல்வேறு பத்திரிகைகளில் இன்று வெளியான பிரதமரின் கட்டுரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசி பல்லாண்டுகளாக நமது கலாச்சாரத்தின் அடையாளமாக திகழ்வதாக அவர் கூறினார்.

மேலும் காசி தமிழ்ச் சங்கமம் மூலம் தமிழ்க் கலாச்சாரத்தையும், இலக்கியத்தையும் பிரபலப்படுத்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டி மதுரை மாவட்டத்தில் இன்று தொடங்கியது.

அவனியாபுரத்தில் தற்போது நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டுப் போட்டியில் ஆயிரம் காளைகளும், 550 மாடுபிடி வீரர்களும் கலந்துகொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Raguraja - 55 Sec)**

<<<<>>>>

கேரள மாநிலம் சபரிமலையில் சுவாமி ஐயப்பன் திருக்கோவிலில் மகரவிளக்கு பூஜைக்கு பிறகு வரும் 20ஆம் தேதி கோவில் நடை சாத்தப்படும் என்று கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் இன்று காலை நிகழ்ந்த சாலை விபத்தில் **4** பேர் உயிரிழந்தனர். **3** பேர் காயமடைந்தனர்.

கும்லா மாவட்டத்தில் ட்ரக்கும் - வேனும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இன்று மும்பை அணி - உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

நவிமும்பையில் நடைபெறும் இப்போட்டி இரவு **7.30**க்கு மணிக்கு தொடங்குகிறது

**<<<<The End>>>>**